DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-205/2025

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.காதர்மைதீன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1,A2 present.)

27.02.2026 – 01.20 PM

முதல் விசாரணை:–

1. நான் நரிப்பையூரில் கிராமத்தில் குடியிருந்து ஹோட்டல் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு தெரிந்தவர்கள்.

2. சுமார் 1 ஆண்டுக்கு முன்பு ஒரு நாள் மாலை நேரத்தில் இரண்டு நபர்கள் எனது ஹோட்டலுக்கு சாப்பிட வந்தவர்களுக்குள் வாய்தகராறு ஏற்பட்டது. அதில் அந்த கூட்டத்திற்குள் யாரோ ஒருவர் என்னை தள்ளிவிட்டதில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. தள்ளிவிட்டவர் யார் என்று எனக்கு தெரியாது.

3. அதன் பிறகு நான் கடலாடி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவிட்டு மேல் சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்றேன். நான் சிகிச்சையில் இருந்த போது போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் மேலே சொன்ன விவரங்களைத்தான் சொன்னேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆகும். புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்து என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

பிறழ் சாட்சி:–

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன்

அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

கடந்த 24.03.2025ந் தேதி 18.00 மணியளவில் நரிப்பையூரில் உள்ள எனது ஹோட்டல் முன்பு எனது ஹோட்டலுக்கு வந்த எதிரிகள் என்னை பார்த்து ஆபாசமான வார்த்தைகளால் பேசி 1ஆம் எதிரியான மூர்த்தி அருவாளை திருப்பி பிடித்து எனது தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். 2,3 எதிரிகளான கண்ணன், மணிகண்டன் கையால் கழுத்து மற்றும் உடம்பில் அடித்து கீழே தள்ளினார்கள். 1வது எதிரி மூர்த்தி அருவாளை காண்பித்து கொலை மிரட்டல் விடுத்தார் என்று புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதாலும் எதிரிகளுடன் சமதாதானம் செய்து சாமாதான மனு தாக்கல் செய்திருப்பதாலும் வழக்கிலிருந்து எதிரிகளை காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/சாதுசிவசுப்பிரமணியன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி